தேவைக்கேற்ப அளிக்கப்பட வேண்டிய வகையில் நிதி உதவி இந்த மக்களுக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு கிணறு வெட்ட வழங்கப்படும் மானியத்தொகை

*வினா எண் 139—திரு சி கணேசன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மக்களுக்கு கிணறு எடுக்க கொடுக்கப்பட்டு வந்த மானியத்தொகை நிறுத்தப்பட்டு இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி:—(அ) நிறுத்தப்பட வில்லை. நிலவள வங்கிகள் மூலம் நிறைவேற்றப்பட்ட இத் திட்டம் சரிவர செயல்படவில்லை.

(ஆ) இத்திட்டத்திலுள்ள குறைபாடுகளைக் களைந்து இதனை சீரிய முறையில் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்து மானியத் தொகையையும் உயர்த்தி அரசாணை நிலை எண். 251, சமூகநலம், 9-2-82-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக அளிக்கப்படும் இந்தக் கடன் தொகை நிலவள வங்கியின் மூலமாக அளிக்கப்படுகின்றது என்று அறிவித்தார்கள். நிலவள வங்கி அளிக்கின்ற அந்த மூலதனம் மத்திய வங்கிகளில் இருந்து வருகின்ற காரணத்தால் 'ஒப்பன் காம்பெட்டிஷன்' என்ற நிலமையில் பெருவாரியான அரிசன மக்கள் இதனைப் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. ஆகவே அதற்கென உள்ள ஸ்தாபனமான ஆதி திராவிடர் நலத்துறையே அந்தப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிலவள வங்கியின் மூலமாக வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்குத் தெரிவித்து இன்று இடர்ப்பாடுகளைக் களைந்து இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்துகின்ற மாற்று ஏற்பாடுகள் கொண்ட செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பினார்கள். அரசு இதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனும் மற்றும் செயலக துறைகளுடனும் கலந்தாலோசித்து பின்னர் ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி ஒரு கிணறு

1983 பிப்ரவரி 4]

தோண்டுவதற்கு ஆகும் மொத்த செலவில் 31 1/3 சதவீதத்தை ரூபாய் 5,000 என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு அரசாங்கம் மானியமாக அளிக்கும் மீதம் உள்ள 66 2/3 சதவீதத்தை நிலவள வங்கிகளிடமிருந்தும் மற்றும் வணிகவியல் வங்கிகளிடமிருந்தும் இந்த மக்கள் பெற்றுக்கொள்ளலாம். ஒரு கிணறு வெட்டுவதற்கு மொத்தச் செலவு ரூபாய் 9,000 என்று புதிய திட்டத்தின் படி கணக்கிட்டு அதன் மீது அரசு நடவடிக்கையை பிறப்பித்து இருக்கிறது.

திரு. க பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மானியத் தொகை வரம்பை உயர்த்திருப்பதாக சொன்னார்கள். அதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். ஏற்கனவே 2500 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இப்போது 5,000—க்கு மேற்படாமல் மொத்த செலவில் 3-ல் ஒரு பங்கை மானியமாக கொடுக்கப்படுவதாக அறிவித்தார்கள். அதில் இருக்கிற சிக்கல் என்ன என்றால் இது நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதன் மூலம் இது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் பல்வேறு நிலவள வங்கிகள் கடன் கொடுக்கும் தகுதியை இழந்துவிட்ட காரணத்தாலே அதன் மூலமாக கடன் பெற இயலாததாகிவிட்டது. ஆகவே இந்த நிலையை உணர்ந்து மீண்டும் அரிசன நலத்துறை மூலமாக இதை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல நிலவள வங்கிகள் மூலம் இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதில் இருந்த சில இடர்பாடுகளை களைந்து கொண்டிருக்கிறது. இதுவரையில நிலவள வங்கிகள் மட்டும் அளித்து வந்த அந்த கடன் உதவியை தற்போது தேசியமயமாக்கப்பட்ட மற்ற வங்கிகள் மூலமாகக்கூட செய்யலாம் என்கிற வகையில் அரசு உத்திரவுகளை பிறப்பித்து இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அளிக்கப்படுகின்ற மானியத் தொகையை உயர்த்தியிருக்கிறது இந்ததுறையே இந்த பணியை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினை உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை தேவைக்கு ஏற்ப இந்த மக்களுடைய கோரிக்கைகள் தற்போது எந்த அளவிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்கிற விவரங்களை அறிந்துகொண்டு இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு; [ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]